# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2327/21 - 2023 අප්‍රේල් මස 11 වැනි අඟහරුවාදා - 2023.04.11

*2327/21 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

### உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (262 ஆம் அத்தியாயம்)**

38(3) ஆம் உட்பிரிவின் கீழான அறிவித்தல்

தேர்தல் ஆணைக்குழுவோடு கலந்துரையாடியதன் பின்னர், என்னால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல்களை நடாத்துவதோடு தொடர்புடைய வேட்புமனுக் கோரும் அறிவித்தல்கள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 26 ஆம் பிரிவுக்கு அமைய, 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 4 ஆந் திகதி பகிரங்கப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, சனவரி மாதம் 18 ஆந் திகதி முதல் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணி வரை வேட்பு மனுக்கள் கையேற்கப்பட்டனவெனவும்,

அதனைத் தொடர்ந்து அச்சட்டத்தின் 38(1) ஆம் உட்பிரிவின் கீழ், 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 9 ஆந் திகதியைத் தேர்தல் தினமாகக் குறிப்பிட்டு 2317/15 ஆம் இலக்கம் மற்றும் 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலொன்று என்னால் வெளியிடப்பட்டதெனவும்,

அத்தேர்தல்களை மேற்குறித்த தினத்தன்று நடாத்துவதற்குத் தேவையான நிதியை பொதுத் திறைசேரியிலிருந்து விடுவிக்க முடியாதுள்ளதென்ற எதிர்பாராத விடயம் காரணமாக தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களை உசாவியதைத் தொடர்ந்து மேலே குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தின் 38(3) ஆம் உட்பிரிவின் பிரகாரம், என்னால் தேர்தலுக்கான வேறொரு திகதியாக 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி நிர்ணயிக்கப்பட்டு 2322/41 ஆம் இலக்க மற்றும் 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 08 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டுள்ளதெனவும்,


1A - G 39344 — 16 (2023/04)



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

தேர்தல்களுக்காக பொதுத் திறைசேரியிலிருந்து நிதியை விடுவிக்க முடியாதென்ற விடயம் தொடர்ந்து தீர்க்கப்படாமையினால் மேலே குறிப்பிடப்பட்ட உரிய திகதியன்று தேர்தல்களை நடாத்த முடியாத நிலைமையொன்று ஏற்பட்டுள்ளமையால் அத்தேர்தல்களை மீண்டும் ஒருமுறை ஒத்திவைக்க வேண்டிவந்துள்ளதெனவும்,

தொடர்ந்தும் தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களை உசாவியதன் பின்னர், தேர்தல்களை நடாத்துவதற்குத் தேவையான நிதி பொதுத் திறைசேரியிலிருந்து விடுவிக்கப்படுமென நிச்சயமாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்படுகின்ற திகதி அல்லது ஏற்கனவே இத்தேர்தல்களை நடாத்துவதோடு தொடர்புடையதாக உயர் நீதிமன்றத்தின் முன்னால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள மனுக்கள் தொடர்பாக வழங்கப்படுகின்ற தீர்ப்புகளுக்கு அமைய தேர்தல்களுக்கான புதிய திகதியொன்றை பெயர் குறிக்க வேண்டிவரின் அத்தகைய திகதி ஆகிய இரண்டு திகதிகளில் முதலில் வரக்கூடிய திகதியன்று கீழ் உள்ள அட்டவணையில் காணப்படுகின்ற உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல்களுக்குரிய திகதியொன்றை பெயர் குறிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென முல்லைத்தீவு மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர் க. விமலநாதன் ஆகிய நான் இத்தால் அறியத் தருகின்றேன்.

**க. விமலநாதன்,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
முல்லைத்தீவு நிருவாக மாவட்டம்.

*மாவட்டச் செயலகம்,*
*முல்லைத்தீவு,*
*2023, ஏப்பிறல் 11.*

**அட்டவணை**

மாந்தை கிழக்குப் பிரதேச சபை
துணுக்காய் பிரதேச சபை
புதுக்குடியிருப்பு பிரதேச சபை
கரைத்துறைப்பற்று பிரதேச சபை

EOG *04 - 0110*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.